# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2016

**ஆண்டு: 10** **திகதி: 18-06-16**

## நேரம்: 2 1/2 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**ஆசிரியர்: திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்**

**மாணவர் பெயர்:**

---------------------------------------------------

## 1. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (25 புள்ளிகள்)

“இன்று தமிழ்மொழி பற்றி எனக்கு இருக்கும் அறிவு அன்று இருந்திருந்தால் நான் தமிழை முதன்மொழியாகப் பயின்று இருப்பேன். தமிழ் உலகத்தின் ஆதிமொழிகளில் மிகச்சிறந்த ஒன்று” என்று பொஸ்ரனில் பேராசிரியர் ஒருவர் கூறினார். அவருக்கு 18 மொழிகள் தெரியும்.

சமீபத்தில் காலம் சென்ற பேராசிரியர் பேர்னாட் பேட் சிகாக்கோ பல்கலைக்கழகத்திலும் யேல் பல்கலைக்கழகத்திலும் பல வருடங்களாகத் தமிழ் கற்பித்து வந்தார். அவர் “தமிழை அறிந்து கொள்வது உங்கள் கடமை அல்ல. அதைப் புரிந்து இன்புறுவதற்காகப் படியுங்கள். ஓர் ஓவியத்தை அதன் அழகிற்காக இரசிப்பதில்லையா? ஓர் இசையை அனுபவிப்பதில்லையா? அது போலத் தமிழை அது தரும் இன்பத்திற்காக நுகருங்கள், படியுங்கள்” என்றார்.

இப்பொழுது அமெரிக்காவில் தமிழ் கற்பித்து வருகின்ற ஜொனதன் ரிப்ளே தமிழ் கற்றுக்கொண்ட அனுபவம் மிகவும் சுவையானது. தனது 19 வயது வரைக்கும் தமிழ் என்ற ஒரு மொழி இருப்பதே அவருக்குத் தெரியாது. இவர் ஒஹாயாவிலுள்ள ஒபர்லின் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு நாள் தமிழ்ப் பாடல் ஒன்றைக் கேட்க நேர்ந்தது. அந்த இசையால் கவரப்பட்டார். அது நம்மாழ்வார் திருமொழி என்று அறிந்து கொண்டார். அந்தப் பாடலில் வந்த “அதுவிதுவுதுவெது” என்பதைப் பலதடைவ சொல்லிப் பார்த்தார். அந்த இனிமை அவரைக் கவர்ந்தது. அந்தக்கணமே தாம் தமிழ் படிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்.

உலகில் ஏறத்தாழ எட்டுக் கோடி மக்களால் பேசப்படும் தமிழ்மொழி உலகிலுள்ள 20 பெரிய மொழிகளுள் அடங்கும். இன்று செம்மொழி அந்தஸ்துப் பெற்றும் உயர்ந்துள்ளது. ஆயினும் மேலைத்தேயத்தவர் ஒரு விடயத்தைப் பார்த்து வியப்படைகிறார்கள். அது என்ன தெரியுமா? இத்தனை தொன்மையான பெருமை வாய்ந்த தமிழைத் தமிழர்கள் ஏன் போற்றுவதில்லை? ஏன் உதாசீனப்படுத்துகிறார்கள்? ஏன் தங்கள் பிள்ளைகள் வேற்றுமொழிகளில் புலமை அடைவதை விரும்புகிறார்கள்?

ஹார்வார்ட் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் மிக மூத்த பல்கலைக்கழகம் ஆகும். 380 வருட பாரம்பரியம் கொண்டது. உலகத் தர வரிசையில் முதலிடத்தில் இருப்பது. இப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழிக்கென ஒரு இருக்கை அமைக்க ஆரம்ப வித்திட்டவர் திருமதி. வைதேகி ஹெர்பெர்ட் அவர்கள். இவர் 18 சங்க நூல்களையும் ஆங்கிலத்தில் தனியொருவராக மொழிபெயர்த்து உலகப் புகழ் பெற்றவர்.

இந்தத் தமிழ் இருக்கைக்குத் தேவையான அறக்கொடை 6 மில்லியன் டொலர்கள் ஆகும். அமெரிக்காவில் வதியும் இரு மருத்துவர்கள் ஆளுக்கு அரை மில்லியன் வழங்கியுள்ளனர். மீதியுள்ள 5 மில்லியனை உலகெங்கும் வாழும் தமிழர்களிடமிருந்தும் தமிழ் நிறுவனங்களிடமிருந்தும் திரட்ட உள்ளனர். நடிகர் சிவகுமார், பிரபல வானொலி ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீத், கவிஞர் பழனி பாரதி ஆகியோர் இதற்கான செய்தி பரப்பி வருகிறார்கள். இதில் நாமும் இணைந்து பங்குதாரர் ஆவோம்.

1. மேலே வந்த பந்தியில் தமிழ் மொழியின் சிறப்புப்பற்றிக் கூறிய வெளிநாட்டவர்கள் யாவர்? (3 புள்ளி)

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

2. பொஸ்ரன் பேராசிரியர் தமிழ் பற்றிக் கூறியது என்ன? (2 புள்ளி)

3. பேராசிரியர் பேர்னாட் பேட் ஏன் தமிழைக் கற்கும் படி கூறுகிறார்? (2 புள்ளி)

4. ஜோனதன் ரிப்ளே எப்படி தமிழின் பால் கவரப்பட்டார்? (2 புள்ளி)

5. ‘‘அதுவிதுவுதுவெது’’ இதனைப் பிரித்து நான்கு சொற்களாகத் தருக. (2 புள்ளி)

6. மேலைத்தேசத்தார் எதற்கு நம்மைப் பார்த்து வியப்படைகிறார்கள்?(3புள்ளி)

7. ஹார்வார்ட் பல்கலைக்கழகம் பற்றி என்ன அறிந்தீர்? (2 புள்ளி)

8. ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு இருக்கை அமைக்க ஆரம்ப வித்திட்டவர் யார்? அவருடைய சிறப்பு பற்றிக் கூறுக. (2 புள்ளி)

9. இந்த இருக்கையை எப்படிச் சாத்தியமாக்க உள்ளார்? (3 புள்ளி)

10. மேலே வந்த பந்தியைப் படித்த பின் நீர் உணர்ந்தவற்றையும் எதிர்காலத் தமிழ் பற்றி நீர் நினைப்பவற்றையும் எழுதுக. (4 புள்ளி)

(மறுபக்கம் பார்க்க)

**2. கீழே வரும் கவிதையை வாசித்த பின் வினாக்களுக்கு விடை தருக.**

(20 புள்ளிகள்)

மேலைத் தேய மக்களும் அரசும்
மூத்தோர் நாட்டின் முதுகெலும்பென்றும்
தலைமுறை கண்ட பெரியவ ரென்றும்
முது பொருள் இவரெனப் பேணுதல் காணீர்.

எத்தனை சலுகைகள் இவர்களுக்கிங்கு
கடைகளிற் பொருட்கள் கொள்ளலிற் சலுகை
மருந்துகள் மாத்திரை வாங்கிடச் சலுகை
வங்கியில் வரிசையில் நில்லாச் சலுகை.

கீழைத் தேய மக்களும் அரசும்
முதியவர் தமக் கொருசுமையென எண்ணி
கிழமொடு பெரிசென இழிமொழி பேசி
உயிரொடு கொல்லும் பழிபுரிகின்றார்.

அகங்கை நெல்லி போல இங்கு
நடப்பவை எல்லாம் கண்டும் தெரிந்தும்
முகவரி அற்ற அகதிகள் போல
ஏமதின முதியோர் அலைவது எதனால்?

(நன்றி நுணாவில் நா.கணபதி)

1. மேலைத்தேய மக்களும் அரசும் என்ன செய்கிறார்கள் என இக் கவிதையில் கண்டீர்? (3 புள்ளி)

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

2. கீழைத்தேய மக்களும் அரசும் என்ன பழி புரிகிறார்கள் எனக் கவிஞர் வருத்தமடைகிறார்? (3 புள்ளி)

3. மேலைத்தேயத்தில் மூத்தோர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் எவையெனக் கண்டீர்? (3 புள்ளி)

4. எமது இன முதியோர் அலைவது யாருடன் ஒப்பிடப்பட்டுள்ளது? (2 புள்ளி)

5. அகங்கை நெல்லி போல என்பதை விளக்குக. (3 புள்ளி)

6. இக் கவிதையைப் படித்த பின் உமது மனதில் எழுந்த உணர்வு அபிப்பிராயம் ஆகியவற்றை விளக்கி எழுதுக. (6 புள்ளி)

## 3. கடிதம் எழுதுதல் ( 15 புள்ளிகள் )

உமது பாட்டனார் சுகயீனமுற்றிருப்பதனால் நீர் இலங்கை/ இந்தியா சென்று அவரைப் பார்த்து வருவதற்காக இரண்டு வாரகால விடுமுறை கோரி உமது பிரதான பாடசாலை அதிபருக்குக் கடிதம் எழுதுக. கடிதம் 100 சொற்களுக்கு அமைவாக எழுதப்பட வேண்டும்.

## 4. கட்டுரை எழுதுதல் ( 20 புள்ளிகள் )

தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிந்து கட்டுரை எழுதுக.

1) உமது தமிழ்ப் பாடசாலையில் நடைபெறவுள்ள தகவல் தினத்தில் மாணவர்களையும் பெற்றோர்களையும் ஊக்குவிக்குமுகமாக "உயர்தரப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுப்பது பயன் தரும்" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளீர். அந்த உரையைக் கட்டுரையாக எழுதுக.

2) காலத்தால் மூத்த மொழிகளில் தமிழ் மிகச் சிறப்பு வாய்ந்தது. "தமிழின் பெருமை" என்ற தலைப்பில் சஞ்சிகை ஒன்றில் வெளியிடக் கட்டுரை ஒன்று எழுதுக.

3) தமிழ் வளர்த்த சான்றோர் வரிசையில் உம்மைக் கவர்ந்த ஒரு பெரியாரைத் தேர்ந்து அவரது சிறப்பு, அவர் தமிழுக்கு ஆற்றிய பணி ஆகியவற்றை விளக்கிக் கட்டுரை எழுதுக.

**கேட்டுக் கிரகித்தல் (20 புள்ளிகள்)**

**5.**

1. தாய் தந்தையரே முதன்மையானவர் என்பதை விளக்க வந்த பழமொழிகள் எவை? (3 புள்ளி)

2. பெற்றோருக்கு மதிப்பளிக்கிறீர் என்பதை எவ்வழிகளில் காட்டுவீர்? (2 புள்ளி)

3. தாய் தந்தையரை மதித்துப் பெருமை பெற்ற பெரியோர்கள் இருவர் பெயர் தருக. (1 புள்ளி)

4. செய்நன்றி மறத்தல் பாவம் என்பதை விளக்க நீர் அறிந்த பழமொழி அல்லது திருக்குறள் எழுதுக. (2 புள்ளி)

5. ‘‘பெற்றோர் நம் கண்கண்ட தெய்வம்’’ இக் கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக. (2 புள்ளி)

**6.**

1. சங்க கால நூல்கள் எவை? (1 புள்ளி)

2. புறநானூறு எந்த நூல் தொகுப்பினுள் அடங்குகிறது? (1 புள்ளி)

3. புறநானூறு என்ற பெயர் இந்நூலுக்கு எவ்வாறு அமைந்தது? (2 புள்ளி)

4. புறநானூற்றைப் பாடிய புலவர்கள் எந்தெந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? (2 புள்ளி)

5. புறநானூற்றின் வாயிலாக நாம் எவற்றை அறிந்து கொள்ள முடிகிறது? (2 புள்ளி)

6. புறநானூற்றில் உள்ள ஒரு பாடல் வரியையும் அதைப் பாடிய புலவரின் பெயரையும் தருக. (2 புள்ளி)